2014 ஆகஸ்ட் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 327, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**327—**

**வினா வங்கி புத்தகம்**

***8280—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

*மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அனைத்து மாவட்டங்களிலும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ, மாணவியருக்குப் பொதுத் தேர்விற்கான வினா வங்கி புத்தகம் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து என் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்குப் பொதுத் தேர்வின்போது பயன்பெறும் வகையில் சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு வினாக்கள்-விடைகள் தொகுப்பு, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின்மூலம் ஒவ்வோர் ஆண்டும் அச்சிடப்பட்டு, மாவட்டத்திற்கு ஒரு மையம் வீதம் தேர்வு செய்து மிகக் குறைவான விலையில் தமிழ்நாடு பெற்றோர்-ஆசிரியர் கழகத்தினால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

[2014 ஆகஸ்ட் 4

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்க பாடப் புத்தகம், எழுத நோட்டுப் புத்தகம், அணிய அழகு வண்ணச் சீருடை, அறிவுப் புரட்சிக்கு மடிக்கணினி, விரைந்து செல்ல மிதி வண்டி, வரைந்து பழக கலர் பென்சில், வண்ணம் தீட்ட கிரேயான், நில வரைபடப் புத்தகம், பள்ளி சென்று வர பஸ் பாஸ், சத்தான மதிய உணவு, மாணவ நேய புத்தகப் பை, கணித நேய உபகரணப் பெட்டி, காலுக்கு இதமாய் காலணிகள். மலைப் பிரதேச மாணவர்களுக்குக் கம்பளி என 14 பொருட்களை இலவசமாக அள்ளித் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) கல்வியில் புரட்சி செய்து கொண்டிருக்கின்ற எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்வித் துறைக்குக் கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக் கொடுத்ததன் காரணமாக 92 சதவீதம் தேர்ச்சி பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பான கல்வியை வழங்கிக் கொண்டிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஆத்தாடி, எங்கள் தாய்க்குத் தங்க மனசு என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் சார்பாக வினா வங்கிப் புத்தகம் வழங்கப்படுகிற இந்த நிலையைக் கடைக்கோடியில் இருக்கிற கிராம மாணவ, மாணவிகளும் பெறுவதற்கு வசதியாக இன்னும் அதிகமான வினா வங்கிப் புத்தகங்களை அளிக்க அரசு முன்வருமா எனக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் இலக்கான 100 சதவீதம் தேர்ச்சி 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பெற்றிட வேண்டும் என்பதற்காக, 70 சதவிகிதத்திற்கும் குறைவான தேர்ச்சி பெற்ற பள்ளித் தலைமை ஆசிரியர்களை அழைத்து, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், பள்ளிக் கல்வித் துறை செயலாளர், துறை இயக்குநர்கள், முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டு ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி,*

2014 ஆகஸ்ட் 4]

*குறைந்த தேர்ச்சி சதவிகிதம் பெற்றதற்கான காரணங்கள் ஆராயப்பட்டு, வரும் கல்வி ஆண்டிலே முழு அளவில் தேர்ச்சி சதவிகிதம் உயர்வதற்கான 'வெற்றி உங்கள் கையில்' என்ற புதுமையான திட்டத்தினைக் கடந்த ஆண்டு முதல் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் இதுவரை இல்லாத அளவுக்கு 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் சென்ற ஆண்டிலே 90.7 சதவீதமாகவும், இதேபோன்று 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்விலே 90.6 சதவிகிதமாகவும் தேர்ச்சி சதவிகிதம் உயர்ந்து உள்ளது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாவட்டத்திற்கு ஒரு மையம் வீதம் ஏற்பாடு செய்து முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக வினாக்கள்—விடைகள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே, பாடப் புத்தகங்கள் எல்லாம் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா வங்கிப் புத்தகம் இலவசமாக வழங்குவதற்கு கோரிக்கை வைத்துள்ளார்கள். இக்கோரிக்கையானது கொள்கை முடிவிலானது. ஆகவே, இந்தக் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 328, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

**328—**

### மாசுக் கட்டுப்பாடு குழு

***27539—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

*மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக அனைத்து ஊராட்சிகளிலும் மாசுக் கட்டுப்பாடு குழுவினை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

TRUTH ALONE TRIUMPHS